DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. CC. 131/2023
**Depositions of PW 1 Witness for**

| Name | பாக்கியலட்சுமி | Caste | |
|---|---|---|---|
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th Day of September 2025

Signature of Witness.

**09.09.2025**
எதிரி ஆஜர். இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். எதிரியை தெரியும். ஜீன்மாதம் 2023 ஆம் ஆண்டு 11 ஆம் தேதி (தற்போது சாட்சி ஏழாவது மாதம் என்று தானாக கூறுகிறார்) மதியம் சுமார் 01.00 மணியளவில் நான் காட்டிற்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்து வாசலில் நின்று தண்ணீர் குடித்துக்கொண்டிருந்தேன். அப்போது எதிரி விக்னேஷ் என்பவர் அங்கு வந்து என்னை பார்த்து எதற்காக எனது தாத்தாவின் இறப்பிற்கு வரவில்லை என்று கேட்டார், நான் உங்களை எனக்கு பிடிக்கவில்லை, அதனால் வரவில்லை என்று சொன்னேன், அதற்கு எதிரி என்னை பார்த்து எங்கடி உன் மகனை என்று கேட்டார், அதற்கு நான் யாரும் இல்லை என்றும், பிறகு வந்து பேசிக்கொள்ளுங்கள் என்று எதிரியிடம் கூறினேன். அதற்கு எதிரி எனது தலையை முடியை பிடித்தும், சேலையை பிடித்து இழுத்தும் கீழே தள்ளிவிட்டார். அப்போது பக்கத்தில் இருந்த

செல்வமணி, சக்திவேல் ஆகியோர் எதிரியை பார்த்து சத்தம் போட்டு விலக்கிவிட்டார்கள். உடனே எதிரி அங்கிருந்து சென்றுவிட்டார். அப்போது எனது மகன் முத்துபாண்டி என்பவர் காட்டிற்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்தவுடன் அவரிடம் சண்டை நடந்த விவரத்தை கூறினேன். எனது மகனுடன் அன்று மதியம் சுமார் 01.30 மணியளவில் காவல் நிலையம் சென்று எதிரி மீது நடவடிக்கை எடுக்ககோரி ஒரு புகார்மனு கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார்மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீஸ் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகியிருந்தார். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை

DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. CC. 131/2023
**Depositions of PW 2 Witness for**

| | | | |
|---|---|---|---|
| Name | முத்துபாண்டி | Caste | |
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th Day of September 2025

Signature of Witness.

**09.09.2025**
எதிரி ஆஜர். இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)
**முதல் விசாரணை**

நான் தற்போது புதுக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது தாயார் ஆவார். எதிரியை தெரியும். கடந்த 11.07.2023 ஆம் ஆண்டு மதியம் சுமார் 01.15 மணியளவில் எங்கள் ஊரின் ஒரு இடத்திலிருந்த போது எங்களது பக்கத்து வீட்டைச் சார்ந்த சக்திவேல் என்பவர் எனக்கு போன் செய்து எதிரி விக்னேஷ் எனது அம்மாவிடம் பிரச்சனை செய்து என் அம்மாவை கீழே தள்ளிவிட்டதாக தகவல் சொன்னார்கள். உடனே நான் என் வீட்டிற்கு வந்தேன், அங்கு கூட்டமாக இருந்தது, என் அம்மாவிடம் என்ன நடந்தது என்று கேட்டேன். அதற்கு என் அம்மா எதிரி விக்னேஷ் தன்னை தகாத வார்த்தைகளால் பேசி கீழே தள்ளவிட்டதாக கூறினார். உடனே நான் எனது அம்மாவை எம்.புதுப்பட்டி காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்றேன். அங்கு எனது அம்மா புகார் அளித்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகியிருந்தார். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை